**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.76/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | குருநாதன் |
| Father's Name : | சந்திரகாசன் |
| Village : | குன்னம் |
| Taluk : | குன்னம் |
| Age : | 52/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.05.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி 1 ஆஜர் / 2, 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது அண்ணன். ஆஜர் ஆகாத 2 மற்றும் 3 எதிரிகளையும் எனக்கு தெரியும். அவர்கள் அண்ணன் மகன் மற்றும் அண்ணன் மனைவி ஆவார்கள். அ.சா.1 இளவரசி எனது மனைவி ஆவார். கடந்த 05.09.2018ம் தேதி மதியம் 3.00 மணிக்கு நான் என்னுடைய வீட்டில் இருந்தபோது எனது அண்ணன், அவரது மகன் பிரபுதேவா மற்றும் அண்ணனின் மனைவி லதா மூன்றுபேரும் எனது வீட்டிற்குள் வந்து, அவ்வீட்டில் எனக்கும் பாதி இடத்தில் உரிமையுண்டு என்று கேட்டு சண்டை போட்டார்கள். அப்போது எனது மனவைி அவர்களிடம் இதில் உனக்கு எப்படி இடம் இருக்கு என்றும், இருந்தால் அதற்கான சான்றிதழ்கள் இருந்தால் காட்டு என கேட்டார். அப்படி சான்றிதழ்கள் எதுவும் இல்லை என்ற கூறி எனது மனைவியை அண்ணாதுரை

இடது தோள்பட்டையில் தவட்டை குச்சியால் அடித்துவிட்டார். அவருடன் சேர்ந்து பிரபுதேவா மற்றும் அவரது அம்மா லதா ஆகியோர் மூவரும் சேர்ந்து எனது மனைவியை முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி அடித்துவிட்டார். அப்போது தேவடியா, குச்சிக்காரி என எனது மனவையை அண்ணாதுரை, பிரபுதேவா மற்றும் அவரது அம்மா லதா ஆகியவர்கள் அசிங்கமாக திட்டினார்கள். பிரச்சனை உண்டான இடம் எனது பெயரில் தான் உள்ளது. 02.11.2012 அன்றே எனது பெயரில் கிரையம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் எனது மனைவியை அடிக்கும்போது ஏன் அடிக்கீறிர்கள் என்று தடுக்க சென்ற என்னையும் மூவரும் கீழே தள்ளி கையாலும், காலாலும் அடித்தார்கள். தகாத வார்த்தைகளால் என்னையும் அசிங்கமாக திட்டினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) திருமணம் ஆவாதற்கு முன்பு நான் எனது அண்ணன், அண்ணன் மனைவி லாதா, எனது அம்மா ஆகியோர் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு பின்பு நானும் எனது மனைவியும் கூட்டுக்குடும்பத்திலிருந்து சண்டைபோட்டு தனியாக வந்துவிட்டோம் என்றால் சரிதான். 02.11.2012 அன்று எனது நடுப்பெரியம்மா ரோசாக்கிளியிடமிருந்து சம்பவ இடத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த கிரையத்தின் அடிப்படையில் தான் நான் தனிப்பட்டா வாங்கினேன் என்றால் சரிதான். நான் அந்த தனிப்பட்டா வாங்குவதற்கு முன்பே ஆஜர் எதிரியின் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். என்னுடன் உடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து மூன்றுபேர் என்றால் சரிதான். மூத்த அண்ணன் அண்ணாதுரை, நடு அண்ணன் ரவி என்கிற ரவிச்சந்திரன், கடைசியாக நான் ஆகியோர் எனது தந்தைக்கு வாரிசுகள் என்றால் சரிதான். சம்பந்தபட்ட சம்பவ இடத்தை பொறுத்து ஆஜர் எதிரி என் மீதும், ரோசக்கிளிமீதும் சிவில் வழக்கில் அசல் வழக்கு எண்.53/2022 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் மேற்கண்ட சிவில் வழக்கை பற்றி கூறியுள்ளேன் என்றால் அதுபற்றி நான் சொல்லவில்லை.

ii)இவ்வழக்கிற்கு முன்பு ஆஜர் எதிரியின் மீது புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 05.09.2018 அன்று சம்பவமானது குன்னம் மெயின்ரோடு அருகில் நடந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு ஏற்கனவே சிவில் வழக்கு நிலுவையில்

உள்ளபோது ஆஜர் எதிரி எதற்காக என்னிடம் வந்து சண்டை போட்டார்கள் என்றால் அதை அவர்களிடம் தான் கேட்கவேண்டும். அவர்கள் தான் எங்கள் இடத்தில் வந்து சண்டை போட்டார்கள். சம்பவம் நடந்த அன்று எதிரிகள் ஆயுதம் வைத்து கொண்டிருந்தார்கள் என்று சொல்லியுள்ளீர்களே என்னென்ன ஆயுதம் யார் யார் வைத்திருந்தார்கள் என்றால் கவட்டையை குச்சி மற்றும் இரும்பு ராடை அண்ணாதுரை வைத்திருந்தார். லதாவும், பிரபுதேவாவும் சும்மாதான் இருந்தார்கள் என்றால் தலைமுடியை பிடித்து இழுத்து அடித்து அசிங்கமாக திட்டினார்கள். மேற்கண்ட சம்பவத்தை யார் யாரெல்லாம் பார்த்தார்கள் என்றால் எதிரில் செருப்பு கடை வைத்திருந்த செல்வி, அவரது கணவர் செல்வராஜ் மற்றும் செல்வராஜின் தம்பிடி மரியதாஸ் ஆகியோர்கள் சம்பவத்தை பார்த்தார்கள்.

iii)சம்பவம் நடக்கும்போது மேற்கண்ட நபர்கள் எப்படி பார்த்தார்கள் என்றால் பக்கத்திலிருந்து பார்த்தார்கள். நானும், எனது மனைவியும் சத்தம்போட்டபோது கூட்டம் கூடியதாக சொல்லியுள்ளேன் என்றும், அந்த கூட்டத்தில் யார் எல்லாம் இருந்தார்கள் என்றாலும் அதை நான் கவனிக்கவில்லை. எனது அண்ணன் அண்ணாதுரை இரும்பு ராடையும், கவட்டை குச்சியையும் வீட்டிலிருந்தே எடுத்து வந்தாரா அல்லது சம்பவ இடத்திலிருந்து எடுத்தாரா என்றால் வீட்டிலிருந்தே எடுத்து வந்தார். சம்பவம் நடந்த இடத்திற்கும் குன்னம் மெயின் ரோட்டிற்கும் எத்தனை அடி தூரம் இருக்கும் என்றால் 50-55 அடி தூரம் இருக்கும். சம்பவம் நடந்த போது எதிரிகளை நான அடித்தேன் என்றால் இல்லை. காயம்பட்ட பின்பு நான் காவல் நிலையத்திற்கு சென்றோனா அல்லது மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் காவல் நிலையத்திற்கு சென்றேன். எனது மனைவி தனியாக மருத்துவமனைக்கு சென்றார் என்றால் அவரது அக்கா சாந்தியை அழைத்துக்கொண்டு சென்றார்.

iv)சம்பவத்தன்று எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. 11.08.2018 அன்று என்மீது ஆஜர் எதிரியின் மனைவி லதா புகார் கொடுத்து அதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு புகார் கொடுத்ததன் முன் விரோதத்தின் காரணமாகத்தான் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்கு எதிரிகளுக்கு சாதகமாக தீர்வாகும் என்ற அச்சத்தில் போலீசாரிடம் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 05.09.2018 அன்று சுமார்3.00 மணியளவில்

நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், சாட்சியாக சொல்பவர்கள் யாரும் அங்கு இல்லை என்றாலும் சரியல்ல. குடலிறக்கம் ஆப்ரஷேன் செய்யப்பட்ட திருமதி லதாவையும், உடல் நிலை சரியில்லாத ஆஜர் எதிரி அண்ணாதுரையையும், அவரது மகன் பிரபுதேவாவையும் வேண்டுமென்றே குற்ற வழக்கில் மோசடியாக ஈடுபடுத்த வேண்டுமென்று நானும், போலீசாரும் சேர்ந்து போட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.